DEPOSITION OF WITNESS

**In the Court of III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No. 227/2021**
**Present – B.Saravanan, B.Sc.B.L,**
**III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

Prosecution witness

(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | கனகஸ்ரீ | Caste | : | |
| Husband Name | : | மகேஷ்குமார் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **08.08.2025.**

**PW - 9**

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது புதுக்கோட்டை அரசு மருத்துவமனை மருத்துவக் கல்லூரியில் உடலியங்கியல் துறையில் போதகராக பணியாற்றுகிறேன். கடந்த 17.03.2020 அன்று திருச்சி கிஆபெவி. அரசு மருத்துவமனை மருத்துவக்கல்லூரியில் சட்டம் சார்ந்த மருத்துவத்துறையில் போதகராக பணியிலிருந்தபோது துவரங்குறிச்சி காவல்நிலைய குற்ற எண்.48/2020 என்ற வழக்கில் சம்பந்தப்பட்டு இறந்துபோன பழனிச்சாமி, 23 வயது ஆண் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய வேண்டுகோள் கடிதத்தைப் பெற்று பெண் காவலர் 1400 ஆசியா என்பவர் பிரேதத்தை அடையாளம் காண்பித்தார். அதன் அங்க, மச்ச அடையாளங்களைக் குறித்துக் கொண்டு அன்றைய தினம் பிற்பகல் 04.05 மணிக்கு பிரேத பரிசோதனையை துவங்கினேன். அதன் விபரங்கள் பின்வருமாறு பிரேதத்தில் விறைப்பு தன்மை உடல் முழுவதும் காணப்பட்டது. பிரேதம் குளிரூட்டப்பட்ட அறையில் வைக்கப்பட்டிருந்தது. நடுத்தர உடல்வாகுடைய

ஆண் பிரேதத்தில் மூச்சு விடுவதற்கு உதவி செய்ய மூச்சுகுழாயில் மருத்துவக்கருவி கழுத்து வழியாக பொருத்தப்பட்டிருந்தது. ஊசி குத்திய காயம் வலது முன் கையில் காணப்பட்டது. சிறுநீர் குழாய் பொருத்தப்பட்டிருந்தது. அறுவை சிகிச்சை மூலம் உண்டாகிய கிழிந்த காயம் 3x1x மூச்சு குழாய் அளவு கழுத்தின் நடுப்பகுதியில் டிரக்கியாஸ்டமி–க்காக இருந்தது.

பிரேதத்தில் இறப்பிற்கு முன்பு ஏற்பட்ட காயங்கள் :

1) தையல் போடப்பட்ட கிடைமட்டமான எலும்பு ஆழ காயம் 15x12 cm அளவில் (12 தையல்கள்) தலையின் பின்புறம் இருந்தது. காயத்தின் ஓரங்கள் சீராக இருந்தன. காயத்தைக் கூராய்வு செய்ததில், 18x10 cm அளவில் தலையின் பின்பகுதியில் உள்ள தலைத்தோலில் இரத்தக்கசிவு காணப்பட்டது. 16 செமீ அளவில் கிடைமட்டமான எலும்பு முறிவு கபால பின் எலும்பில் இரத்தக்கசிவுடன் காணப்பட்டது. மூளைச்சவ்வில் இரத்தக்கசிவு மூளையின் பின் மடல்களிலும், சிறு மூளையைச் சுற்றிலும் காணப்பட்டது.

2) 3x2x எலும்பு வரையிலான ஆழம் செங்குத்தான வெட்டுக்காயம் வலது காதின் பின்புறம் காணப்பட்டது. அதன் ஓரங்கள் சீராக இருந்தன. 5X3 cm அளவில் காதை சுற்றியுள்ள தலைத்தோலின் அடியில் இரத்தக்கசிவு காணப்பட்டது.

3) 4x2x தசை ஆழம் வெட்டுக்காயம் இடது முன்கையின் பின்புறமாக அதன் கீழ்பகுதியில் காணப்பட்டது. காயத்தின் இரு ஓரங்களும் சீராக இருந்தன.

4) சிவந்த பழுப்பு நிற சிராய்ப்பு காயங்கள் கீழ்கண்ட இடங்களில் காணப்பட்டன.

- 3x2cm அளவில் வலது கண்ணின் வெளி ஓரத்திலும்
- 1x0.5 cm அளவில் செங்குத்தாக வலது முன்கையின் நடுப்பகுதியிலும்
- 9x2 cm அளவில் சாய்வாக வலது முட்டியின் மேல் பகுதியிலும்
- 6x5 cm அளவில் வலது முட்டியின் முன்புறத்திலும்
- 4x1 cm அளவில் இடது காலின் மேல் பகுதியிலும்

– 2x1 cm அளவில் இடது முட்டியின் முன் பகுதியிலும்

**மற்ற விபரங்கள்**

பிறப்புறுப்புகள் இயல்பு நிலையில் இருந்தன. இருதயம் இயல்பு நிலையில் இருந்தன. இருதய அறையில் திரவ இரத்தம் இருந்தது. இருதய இரத்த நாளங்கள் இயல்பு நிலையில் இருந்தன. நுரையீரல்கள் இயல்பு நிலையில் இருந்தன. அதன் வெட்டுத் தோற்றம் இயல்பு நிலையில் இருந்தது. கல்லீரல், மண்ணீரல் மற்றும் சிறுநீரகங்கள் வெளிறி காணப்பட்டன. அதன் வெட்டுத் தோற்றத்தில் இயல்பு நிலையில் இருந்தது. குரல்வளை மற்றும் மூச்சுக்குழாய் இயல்பு நிலையில் இருந்தது. நாவடி எலும்பு இயல்பு நிலையில் இருந்தது. இரைப்பை இயல்பு நிலையில் இருந்தது. அதன் வெட்டுத் தோற்றத்தில் 100 மில்லி அளவில் பழுப்பு நிற திரவம் இருந்தது, குறிப்பிடத்தக்க எந்த நெடியும் இல்லை. அதன் சிலேடும படலம் இயல்பு நிலையில் இருந்தது. சிறுநீர்ப்பை காலியாக இருந்தது. இடுப்பு எலும்பு இயல்பு நிலையில் இருந்தது. முதுகெலும்பின் நெடுவரிசை இயல்பு நிலையில் இருந்தது.

இறந்த நேரமானது மருத்துவமனை கோப்பில் 16.03.2020 இரவு 21.00 மணி என குறிக்கப்பட்டிருந்தது, எனது பிரேத பரிசோதனை முடிவு அதனுடன் ஒத்திருந்தது. உடல் உள்ளுறுப்புகள் இரசாயண பகுப்பாய்விற்காக வட்டார தடயவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. இரத்தம் தோய்ந்த காட்டன் துணி இறந்தவரின் இரத்த வகையை கண்டறிய வட்டார தடயவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

**<u>இறுதி கருத்து</u>**

இறந்து நபரானவர் அவருக்கு ஏற்பட்ட தலை காயத்தின் விளைவுகளால் இறந்திருக்கக்கூடும் என சான்று வழங்கினேன். எனது பிரேத பரிசோதனை அறிக்கை **அதசாஆ.8** ஆகும். விசரா அறிக்கை **அதசாஆ.9** ஆகும், அதில் மேற்படி இறந்தவரின் உள்ளுறுப்புகளில் மதுவோ, விஷமோ கண்டுபிடிக்கப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனது இறுதி கருத்துரை **அதசாஆ.10** ஆகும். அருவாள் போன்ற ஆயுதத்தால் மேற்படி நபரை

ஒருவர் தாக்கும்போது அவருக்கு மேற்சொன்ன காயங்கள் ஏற்பட்டு அதனால் இறப்பு ஏற்பட வாய்ப்புண்டு. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**</u>

இறந்து 24 மணி நேரம் கழித்து பிணத்தின் உள்ளுறுப்புகளில் மதுவின் தன்மை காணப்படுமா என்றால் உடனடியாக பிரேதம் குளிரூட்டப்பட்ட அறையில் வைக்கப்பட்டாலோ அல்லது சாதாரண நிலையில் இருந்தாலோ மதுவின் தன்மை காணப்பட வாய்ப்புண்டு. மேற்படி பிரேத பரிசோதனைக்கான வேண்டுகோள் கடிதத்தை மேற்படி ஆய்வாளர் நேரில் வந்து கொடுத்தாரா என்றால் ஆய்வாளர் நேரில் வந்து வேண்டுகோள் கடிதம் கொடுத்தாரா என ஞாபகமில்லை. ஆசியா என்ற காவலர் அதை என்னிடம் கொடுத்தார். ஆய்வாளர் பாலாஜி என்பவர் என்னை இந்த வழக்கில் விசாரித்து வாக்குமூலம் வாங்கினாரா என்றால் ஒரு ஆய்வாளர் என்னை விசாரித்தார், அவர் பெயர் எனக்கு ஞாபகமில்லை. ஆய்வாளரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் திருச்சி அரசு மருத்துவமனை பிணக்கிடங்கில் இருந்த முகமது அன்சாரி என்பவரது பிரேதத்தை ஆசியா என்பவர் அடையாளம் காட்டியதாக கூறினேனா என்றால் இல்லை, பழனிச்சாமி என்பவரது பிரேதத்தைத்தான் கூறினேன். முகமது அன்சாரியின் பிரேதத்தைத்தான் பிரேத பரிசோதனை செய்து கருத்து வழங்கியதாக ஆய்வாளரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் கூறினேன் என்றும், அதை தற்போது மாற்றிக்கூறுகிறேன் என்றால் சரியல்ல. தலையின் பின்புறம் உள்ள ஆக்சிபிடல் பகுதியில் தோலும், தசையும் ஒன்றுக்கொன்று ஒட்டிதான் இருக்கும். தலைப்பகுதியில் உள்ள தசைப்பகுதி மிகவும் குறைவாக இருக்கும் என்றால் சரிதான். மேற்படி பிரேதத்தில் காணப்பட்ட முதல் காயம் எலும்பு முறிவு காயமாகும். அந்த காயம் அந்த எலும்பின் உள் பகுதி அதாவது எலும்பு முழுவதும் இருந்தது. ஒரு நபர் குடித்துவிட்டு கூரான பகுதியில் பின்புறமாக விழுந்தால் மேற்படி முதல் காயம் ஏற்பட வாய்ப்புண்டா என்றால் இல்லை. அவ்வாறு கூரான பகுதியில் வேகமாக பின்புறமாக விழுந்தால் முதல் காயம் ஏற்பட வாய்ப்புண்டு

என்றால் சரியல்ல. எனது கருத்து மருத்துவரீதியாக தவறானது என்றால் சரியல்ல. பொதுவாக சிராய்ப்பு காயங்கள் சொரசொரப்பான பகுதியில் உராய்வதால் ஏற்பட வாய்ப்புண்டா என்றால் அதற்கு வாய்ப்பு உண்டு. ஆய்வாளர் கொடுத்த பிரேத பரிசோதனை வேண்டுகோள் கடிதத்தில் குறிப்பிட்டிருந்த காயங்களை நான் எனது அறிக்கையில் அப்படியே குறிப்பிட்டிருந்தேன் என்றால் சரியல்ல. நான் தவறான பிரேதத்திற்கு பிரேத பரிசோதனை செய்துவிட்டு பழனிச்சாமியின் உடலை பிரேத பரிசோதனை செய்ததாக தவறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறு பிரேதம் மாறி பரிசோதனை செய்ய வாய்ப்பே இல்லை.

**மறுவிசாரணை** – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.